16. கலந்தாய்விற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பெற்றோருடன் வர வேண்டும். பெற்றோர் இல்லையெனில் மட்டுமே பாதுகாப்பாளருடன் வரவேண்டும். இல்லாவிட்டால் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

17. கலந்தாய்வு முடிந்தபின் அன்றே அனைத்து கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு சரியான நேரத்தில் கட்டணம் செலுத்தத் தவறிய மாணவியர்களுக்கு அவர்களின் சேர்க்கை அனுமதி ரத்து செய்யப்படும்.

18. மாணவியருக்கு வாழ்க்கையின் தேவை கருதி கற்பிக்கப்படும் சிறப்பு வகுப்புகள் விபரம் :

**1. Computer Education 2. Spoken English**

## பாடப்பிரிவுகள்

**கீழ்க்கண்ட பாடப்பிரிவுகள் கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன**

முதற்பாகம் – தமிழ்
இரண்டாம் பாகம் – ஆங்கிலம்

**இளங்கலை பட்ட வகுப்பு (B.A.,)**

முதன்மைப்பாடம் – துணைப்பாடம்

1. தமிழ் இலக்கியம் – 1. தமிழக வரலாறும் பண்பாடும்
2. ஆங்கில இலக்கியம் – 2. தமிழ் இலக்கிய வரலாறு
   1. Journalism
   2. Social History of England
3. வரலாறு (தமிழ் போதனா மொழி) – 1. தற்கால அரசாங்கங்கள்
   2. சுற்றுலாவியல்
4. பொருளாதாரம் – 1. கணக்குப்பதிவியல் கோட்பாடுகள்
   2. புள்ளியல் முறைகள்

**இளநிலை பட்ட வகுப்பு (B.Sc.,)**

5. கணிதம் 1. இயற்பியல் 2. புள்ளியியல்
6. இயற்பியல் 1. கணிதம் 2. வேதியியல்
7. வேதியியல் 1. கணிதம் 2. இயற்பியல்
8. தாவரவியல் 1. விலங்கியல் 2. வேதியியல்
9. விலங்கியல் 1. தாவரவியல் 2. வேதியியல்
10. வணிகவியல் B.Com., 1. பொது பொருளாதாரம் I
    2. பொது பொருளாதாரம் II
11. வணிகவியல் கணினிப் பயன்பாடுகள் (B.Com.,Computer Application)

**முதுநிலை பட்டம்**

1. வரலாறு M.A., History
2. தமிழ் M.A., Tamil
3. விலங்கியல் M.Sc., Zoology

**சான்றிதழ் வகுப்புகள்**

1. Yoga, Meditation in Holistic Health
2. Certificate course on Human Rights Education

## கட்டணத் தொகை விபரம்

| வ. எண். | கட்டண விபரம் | | ஒரு ஆண்டிற்கு | தொகை | |
|---|---|---|---|---|---|
| 1. | இளநிலை (B.A.,B.Sc.,B.Com.) | | | | |
| | விண்ணப்ப படிவம் | | | | |
| | | நேரடியாக | | 50 | |
| | | தபால் மூலம் | | 80 | |
| 2. | முதுநிலை | நேரடியாக | | 60 | |
| | | தபால் மூலம் | | 90 | |
| 3. | கட்டணம் | முதுகலை | 500 | | |
| | | முதுநிலை அறிவியல் | 750 | முக்கியப் பாடம் | |
| 4. | சேர்க்கைக் கட்டணம் | | 5 | | |
| 5. | ஆய்வுக்கூடக் கட்டணம் | | | | |
| | 1) வணிகவியல் கணினிப் பயன்பாடுகள் | | | 5250 | |
| | 2) கணிதம் | | | 75 | |
| | 3) இயற்பியல் | | | 150 | |
| | 4) வேதியியல் | துணைப் பாடம் | | 200 | |
| | 5) தாவரவியல் | | | 225 | 75 |
| | 6) விலங்கியல் | | | 225 | 75 |
| | முதுநிலை விலங்கியல் | | | 350 | |
| 6. | சிறப்புக் கட்டணம் | | 329 | | |
| 7. | பல்கலைக்கழக நுழைவுக்கட்டணம் | | 195 | | |
| 8. | +2 மதிப்பெண் பட்டியல் | | | | |
| | சரிபார்க்கும் கட்டணம் | | 50 | | |
| 9. | பட்டமளிப்பு விழா | | 25 | | |
| 10. | அடையாள அட்டை, எழுது பொருள் | | 60 | | |
| 11. | விபத்துக் காப்பீட்டுத் தொகை UG | | 37 | | |
| | | PG | 25 | | |
| 12. | பெற்றோர் ஆசிரியர் கழகம் | | 60 | | |
| 13. | நாட்டு நலப்பணித் திட்டம் | | 10 | | |

முதல்வர்

# அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி

(தன்னாட்சி)

(தேசிய தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் $B^{++}$ தரம் பெற்றது)

(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசு உதவி பெறும் கல்லூரி)

(கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)

**சின்னக்கலையம்புத்தூர் - 624 615**
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.
போன் : 04545 – 255128
Web : www.apacwomen.ac.in
email id : apacwprincipal@gmail.com



# தகவல் தொகுப்பு

# 2019 - 2020

## அறிமுகம்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகம் அருட்பயிரையும், அறப்பயிரையும் வளர்ப்பதோடு அறிவுப்பயிரையும் வளர்த்து சமுதாயச் சேவையில் முன்னோடியாக ஆலய நிர்வாகம் நிகழ்த்திட வேண்டும் என்ற இலக்கில் கல்வி நிறுவனங்களை நிறுவத் தொடங்கியது. பழனி வட்டத்தில் பெண்களின் முன்னேற்றம் கருதியும், பெண்களின் அறிவு வளர்ச்சியில் நிறைவு காணும் நோக்குடனும், 1970–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் முதல் நாள் இக்கல்லூரியைத் தோற்றுவித்தனர். இதன் தோற்றத்திற்கு இந்து சமய அறநிலையத்துறையும், இத்திருக்கோயில் நிர்வாகமும் இணைந்து செயல்பட்டன.

அடிவாரத்தில் சிறிய கட்டிடத்தில் இயங்கி வந்த இக்கல்லூரி 1981 ஆம் ஆண்டு நிர்வாகத்தினரின் அரும்பெரும் முயற்சியால் சின்னக்கலையம்புத்தூரில் விஜயகுமார் நூற்பாலைக்கு அருகில் பரந்த வெளியில் நீண்ட தொலை நோக்கத்தோடு, அழகிய கட்டிடத்தில் செயல்படத் தொடங்கியுள்ளது.

அறநிலையத்துறை சார்புடைய கல்லூரியாக இருப்பதால் இந்நாட்டின் கலை, பண்பாடு, பக்தி மரபுகள், பாரம்பரியம் ஆகியவற்றைக் கட்டிக்காப்பதில் கருத்தூன்றும் நோக்கத்தோடு வழிபாடு, மன்றங்களின் செயல்பாடுகள் ஆகியவை சிறந்த முறையில் நடைபெறுகின்றன. நாளும் கூட்டு வழிபாட்டோடு இக்கல்லூரி செயல்படத் தொடங்கியது. முருகனின் திருவருளால், அர்ப்பணிக்கும் எண்ணமும், சேவை நோக்கமும், விரைந்து செயலாற்றலும் நன்மையை நாடும் திறனும் வெற்றிச் சாதனையை அடையும் இலட்சியமும் பெறுவதற்கு இவ்வழிபாடு அடிப்படையாக அமைகிறது.

கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராத உழைப்பே நல்கும் முதல்வர், ஆசிரியர், அலுவலர் ஆகியோருடன் மாணவியரும் அவர் தம்மை ஊக்குவிக்கும் பெற்றோர்களும் உறுதுணை செய்ய வேண்டியது அவர்தம் கடமையாகும்.

இக்கல்லூரி தன் நாற்பத்தி ஒன்பது ஆண்டுகால கல்விப் பணியை நிறைவு செய்து, தற்போது தேசிய தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் $B^{++}$ தரத்தோடு தன்னாட்சிப் பொறுப்பையும் மகிழ்வோடு ஏற்று இமயமென எழிலுறு ஓங்கி நிற்கிறது.

## நுழைவு விதிகள்

இக்கல்லூரிக்கு நுழைவு விதிகள் அனைத்தும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்டது.

விண்ணப்பங்களை www.apacwomen.ac.in என்ற கல்லூரியின் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்லூரியில் நேரில் சமர்ப்பிக்கும்பொழுது விண்ணப்பக் கட்டணமாக இளநிலை (UG) –க்கு ரூ. 50/– மற்றும் முதுநிலை (PG)–க்கு ரூ. 60/–ம் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்பும் போது விண்ணப்ப கட்டணத்தை The Principal, A.P.A. College for Women, Palani என்ற பெயரில் (Payable at palani) வங்கி வரைவோலையாக (DD) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையின்றி தபால் மூலம் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

### விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள் :

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களே பூர்த்தி செய்ய வேண்டும்.
2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
3. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் (பாஸ்போர்ட் சைஸ்) ஒன்று விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும்.
4. மேல்நிலைப் பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியைக் குறிப்பிட வேண்டும்.
5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்) / (SCA) / பழங்குடியினர் (ST), மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (MBC), சீர்மரபினர் (DNC) மற்றும் பிற்பட்ட வகுப்பினரைச் (BC), சேர்ந்த மாணவர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரிய வந்தால்

அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவர்.

இ) தவறான மதிப்பெண்களைக் குறிப்பிட்டதற்காக அவர்மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப்படை வீரர்களின் குழந்தைகள் விண்ணப்பத்தில் இந்த விவரத்தை அதற்குரிய இடத்தில் புள்ளி விவரங்களுடன் குறிக்க வேண்டும்.
8. சரியான விபரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
9. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேல்நிலைப் பள்ளித்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள் கல்லூரி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.
10. கல்லூரிக் கல்வி இயக்குனரக வழிகாட்டுதலின்படி மாணவியர்கள் சேர்க்கை நடைபெறும்.
11. பட்டியலில் விண்ணப்பதாரர் அரசு விதிகளின்படி சாதிச்சான்றிதழ் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழ் நகல் சமர்ப்பித்து ஒரு விண்ணப்பபடிவம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
12. விண்ணப்பதாரரின் அதிகபட்ச வயது வரம்பு கல்வியாண்டில் ஜுலை 1 ஆம் தேதியன்று 21 வயதுக்குள் இருக்க வேண்டும். **BC, MBC, SC, SCA, ST & Differently abled persons** ஆகியோருக்கு அரசு விதிகளின்படி வயது வரம்பில் சலுகை வழங்கப்படும்.
13. 2015–2016 ஆம் கல்வியாண்டு முதல் மாணவியர் சேர்க்கைக்கான கலந்தாய்வு ஒற்றைச் சாளரமுறைப்படி (SINGLE WINDOW SYSTEM) நடைபெற்று வருகிறது.
14. கல்லூரி சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.
15. மாணவியர்களை கேலி (ராக்கிங்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதில் மீறும் மாணவியர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.

### மாணவியர்களின் சேர்க்கைக்கான கலந்தாய்வின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்

1. மேல்நிலைப்பள்ளி அசல் மதிப்பெண் பட்டியல் அல்லது தகுதியுடைய தேர்வுச் சான்றிதழ்.
2. கடைசியாகப் படித்த கல்வி நிறுவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழ்.
3. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC), சீர்மரபினர் (DNC), பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BCM) ஆகியோர் அசல் சான்றிதழ்.
4. கடவுச்சீட்டு அளவிலான இரு புகைப்படங்கள்.
5. மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.
6. மாணவியர்கள் சேர்க்கைக்குத் தேர்வு செய்ய பெற்றவர்கள் அசல் மாற்றுச்சான்றிதழைக் கட்டாயம் ஒப்படைக்க வேண்டும்.

(குறிப்பு : அசல் மாற்றுச்சான்றிதழ் திருப்பித் தரப்பட மாட்டாது. எனவே தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப் படுகிறார்கள்.